[21st July 1964

கவர்ன்மெண்ட் எஸ்டேட்டில் வீடுகள்

*609 கேள்வி.—திரு. முனு. ஆதி: கனம் பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) 1961-62-ம் ஆண்டுகளில் கவர்ன்மெண்ட் எஸ்டேட்டில் சர்க்கார் சிப்பந்திகளுக்கு ஏதேனும் வீடுகள் கட்டப்பட்டனவா?

(இ) அங்கு சட்டமன்ற உறுப்பினர்களுககு வீடுகள் கட்ட திட்டமிடப்பட்டு இருந்ததே, அது எந்த அளவு நிறைவேறி யுள்ளது?

(உ) இதுவரை எத்தனை அங்கத்தினர்களுக்கு அங்கு வீடுகள் தரப்பட்டுள்ளன?

(எ) வீடுகள் பெறுவதற்காக அங்கத்தினர்களுக்கு விதிக்கப் படும் நிபந்தனைகள் யாவை?

The Hon. Sri V. RAMAIAH: (*a*) to (*d*): A statement [a] is placed on the Table of the House.

திரு. முனு. ஆதி: இந்த அறிக்கையில் இறந்து போன இரண்டு உறுப்பினர்களுடைய குடும்பங்கள் இரண்டு வீடுகளில் இருக்கிறார் கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இவர்கள் குடியேறினபோது, அவர்கள் உறுப்பினர்களாக இருந்தார்களா, அல்லது இறந்து போன பின்னால் உறுப்பினர்களின் குடும்பங்கள் குடியேற்றப் பட்டனவா?

கனம் திரு. வெ. ராமைய்யா: இவர்கள் உறுப்பினர்களாக இருந்தபோது அலாட் செய்யப்பட்டது என்றுதான் நினைக் கிறேன். இது குறித்து தனியாக கேள்விபோட்டால் எல்லா விவரங்களையும் சொல்ல முடியும்.

திரு. கரு. சீமைச்சாமி: சட்டமன்ற உறுப்பினர்களுக்கென்று தனியாக ஹாஸ்டல் கட்டுவதற்காக தொகை ஒதுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. அதற்கான வேலை எப்போது துவக்கப்படும்? இதற்கு அமைச்சர் அவர்கள் துரிதமான நடவடிக்கை எடுப்பார் களா?

கனம் திரு. வெ. ராமைய்யா: கனம் அங்கத்தினர் அவர்கள் இந்தக் கேள்வியை கொஞ்சம் நன்றாக கவனித்திருந்தால், சட்ட சபை அங்கத்தினர்களின் விடுதிக்கும், இதிலுள்ள க்வார்ட்டர்ஸ்-க்கும் சம்பந்தம் இல்லை என்று தெரிய வரும். சட்டசபை உறுப் பினர்களுக்கு ஆஸ்டல் கட்டுவதற்காக தனியாக நிதி ஒதுக்கப்பட் டிருக்கிறது.

Compulsory Insurance Scheme

*610 *Q.*—Sri R. S. VEERAPPA CHETTIAR: Will the Hon. the Minister for Home be pleased to state whether there is any proposal to introduce Compulsory Insurance Scheme to the personnel of the Police Department?

The Hon. Sri P. KAKKAN: No, Sir.

---

a Printed as Appendix V on pages 539–542 infra.